அங்கு உடல் ஊனம் உற்ற குழந்தைகள் முதியோர்களுக்கு ஊன்று கோல், சக்கரவண்டி, தையல்மெஷின் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டார்கள். அவர்களுடைய தொகுதியிலே பெறப்பட்டமனுக்கள் தையல் மெஷினுக்காக 6-ம் 3 சக்கர வண்டிக்காக 4, காது கேட்கும் கருவி ஒன்றும் கேட்டிருந்தார்கள். அவைகள் அத்தனையும் வழங்கப்பட்டு விட்டன. தொடர்ந்து விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் அதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 538 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

538—

கல்லிடைக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் சத்துணவுக் கூடம்.

* 11696—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி அரசு உயர் நிலைப்பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: சமூகநலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக் குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் சத்துணவுக்கூடம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா என்று கேள்வி கேட்டிருக்கிறேன். அமைச்சர் மொட்டையாக இல்லை என்று பதில் சொல்லியிருக் கிறார்கள். ஏன் இல்லை ? அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஏன் சத்துணவு கூடம் அமைக்கவில்லை என்று தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே கேள்வி கேட்டவுடன் இல்லை என்று தான் சொல்லுவார்கள். அதற்கு பின்னால் திரும்பவும் கேள்வி கேட்கிறபோது விரிவான பதில் அளிக்கப்படும் என்பதை தொடர்ந்து சட்டமன்றத்திலே

பணியாற்றுகின்ற நயினார் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். (சிரிப்பு) கல்லிடைக் குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியில்.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நயினார் அவர்கள் நடுவிலே ஏற்பட்டவர் அல்ல.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : தொடர்ந்து சட்டமன்றத்திற்கு வந்துகொண்டிருப்பவர். கல்லிடைக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் ஏற்கெனவே சத்துணவு சமையல் கூடம் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் அங்கு சத்துணவுக் கூடம் கட்டுகிற வழக்கம் நமக்கு இல்லை. சத்துணவு கூடங்களுக்கு சமையல் அறை கட்டுகின்ற வழக்கம் தான் தொடர்ந்து 10 ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் கல்லிடைக் குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு ஏற்கனவே சத்துணவு கூடச் சமையல் அறை இருப்பதால் சத்துணவு கூடம் கட்டுகிற அவசியம இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய துவக்க பள்ளியும் அரசு உயர்நிலைப் பள்ளியும் அருகருகிலே இருப்பதனால் அந்த ஒன்றிய துவக்கப் பள்ளியில் மட்டும்தான் சமையல் அறை இருக்கிறது. அரசு உயர்நிலைப்பள்ளியில் சமையல் அறை இல்லை. அந்த ஒன்றிய துவக்கப் பள்ளியில் சமையல் அறை இருப்பதால் அந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு சமையல் செய்து முடித்தவுடன் தான் அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள மாணவர்களுக்கு சமையல் பண்ண வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அந்த மாணவர்கள் பசியோடு காத்து இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் சமையல் அறை கட்டித் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கல்லிடைக் குறிச்சி உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்த மட்டில் அங்கே சத்துணவுக் கூடத்திற்கு உரிய சமையல் கூடம் இருப்பதாகத்தான் தகவல் கிடைத்து இருப்பதால் அங்கே புதிய சமையல் கூடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. வேறு எங்காவது ஒரு பள்ளியில் இருக்கிற சத்துணவுக் கூடத்திற்கு சமையல் அறை இல்லை என்று சொன்னால், அதை அங்கே இருக்கிற நகராட்சிக்கு தெரிவித்தால் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அது கட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 539, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.